**தலைப்பு 287 – காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 287 – காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஏப்ரல் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட 02 மூலதன செலவின விடயங்களில் ரூபா 2,584,264 நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது சேமிப்பின் சதவீதமாக 30 இற்கும் 54 இற்கும் இடையிலான வீச்சினை கொண்டிருந்தது. | மூலதன செலவின விடயத்தின் கீழ் இயலுமை அபிவிருத்திற்காக ரூபா 5,000,000 நிதிஏற்பாடு பழைய ஆவணங்களை பாதுகாப்பதற்கு ஸ்கேன் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட அந்த ஒப்பந்தம் ரூபா 3,036,000 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் போது நலிவான நிலையில் காணப்பட்ட 1979 பக்கங்களை ஸ்கேன் செய்வதற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனம் ஒரு பகுதி வேலையினை பூர்த்தி செய்து கையளிக்கும் போது அதிக காலம் எடுத்தமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பணிகளில் ஒரு பகுதிக்காக மாத்திரம் 2022 இல் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. அவ்வாறே அந்த ஆவணங்களின் அளவை ஸ்கேன் செய்வதற்கு அந்த ஆண்டில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட தொகையினை விட குறைந்த கேள்வி ஸ்கேன் செய்வதற்காக கிடைத்தமையினால் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. செலவின விடயம் 2401 பயிற்சி மற்றும் இயலுமை | அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டை முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தியின் கீழ் 54 சதவீதம் தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்காக செலவினங்கள் செய்வதை வரையறுத்தமை காரணமாக ஏற்பட்ட சேமிப்பாகும். | |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற அட்டவணை இலக்கம் (iii) இன் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 1,832,687 ஆக இருந்த போதும், திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அது ரூபா 262,150 ஆனமையால் ரூபா 1,570,537 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். நிதிக் கூற்றுக்களின் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்ற கடப்பாடுகள் பெறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,832,687 ஆகும். அதாவது CIGAS முறைமையில் சனவரி மாதம் மாதாந்த பொழிப்பு சமர்ப்பித்தல் பெப்ரவரி 03 ஆம் திகதி முடிவடைந்தமையினால் அத்திகதியில் கிடைக்கப் பெற்ற பொறுப்புக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வருடாந்த நிதிக் கூற்றுக்களில் தரவுகளை உள்ளடக்குவதற்காக பெப்ரவரி 28 வரையான காலம் கிடைக்கின்றமையினால் அந்த காலத்திற்கு இடையே வருகின்ற சகல பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் CIGAS முறைமையில் உள்ளடக்கப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடும் போது குறைவினை தவிர்க்க முடியாத காரணமாகும். | ஆண்டிற்குரிய சகல பொறுப்புக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 94 மற்றும் 2017 ஏப்ரல் 22 ஆம் திகதிய இலக்கம் 255/2017 என்ற அரச | ஏனைய பணிகளை உள்ளடக்கிய 04 மீண்டெழும் செலவின விடயங்களில் சேமிப்பு தொகையினை விட மேலும் பொறுப்புக்கள் | மதிப்பீடு செய்யும் போது எதிர்பார்க்கக் கூடிய செலவினங்கள் |

| | | |
|---|---|---|
| கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) பந்திக்கும் முரணாக திணைக்களத்தால் வருடாந்த நிதி ஏற்பாட்டை விஞ்சி நான்கு செலவின விடயங்களுக்கு உரியதாக ஒட்டுமொத்தமாக ரூபா 825,273 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்படுத்தப்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். வெற்றிடங்களினால் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமித்தல், காகிதாதிகளின் விலை அசாதாரணமாக அதிகரித்தமை, வாகன பராமரிப்பு போன்ற காரணங்கள் ஆண்டின் நிதி ஏற்பாட்டு எல்லையினை விஞ்சி செலவினங்கள் செய்வதற்கு ஏற்பட்டதுடன், அடுத்து வரும் ஆண்டின் பட்டியல்கள் இந்த ஆண்டில் கிடைக்கப் பெற்றமை. | தொடர்பாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள். | 273,353 | 2021 ஒக்டோபர் 05 ஆம் திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 179,623 தொகை மற்றும் 2016 திசெம்பர் 30 ஆம் திகதி வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் இருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 93,730 கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் பிணையாளரிடம் இருந்தோ அல்லது உரித்தாளியிடம் இருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலை நீக்கத்திற்கு உட்பட்டவருக்கு நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் இறுதி அறிக்கை, குற்றப்பத்திரிகை மற்றும் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் எதிர்கால மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதன் கீழ் ஒன்றிணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒழுக்காற்று அதிகாரியினால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே திணைக்களத்திற்கு | நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தாபன விதிக் கோவையின் சட்ட விதிகளுக்கு இணங்க நிலுவை கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இடம் மாற்றலாகி வருகை தந்து 2021.10.05 ஆம் திகதி முதல் பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு சகல முற்பணம் மற்றும் கடன் பணத்தை தீர்க்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4:5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே இடர் கடன் தொகைக்காக கையொப்பமிட்ட பிணையாளரின் தகவல்கள் அந்த அமைச்சில் இருந்து வருவிக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104(3) | நட்டம் அல்லது இழப்புக்கள் தொடர்பாக பூரண அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமாயின் ஆரம்ப அறிக்கையொன்று உடனடியாக அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 மே 28 ஆம் திகதி மற்றும் 2022 மே 30 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்ட இலக்கம் PF 7866 மற்றும் இலக்கம் PC 2373 என்ற வாகனங்கள் தொடர்பாக கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 14 ஆம் திகதி வரையிலும் ஆரம்ப மற்றும் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | PF 7886 ஆம் இலக்க வாகனனத்தின் விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) அறிக்கையில் காண்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. PC 2374 ஆம் இலக்க கெப் வண்டிற்காக காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்காக ஆரம்ப பரிசோதனைகளுக்காக உத்தியோகத்தர்களை பெயரிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது நிதிப் பிரமாணம் 104(3) அறிக்கை வழங்கக் கூடிய காலம் மற்றும் சந்தர்ப்பம் | உரிய பரிசோதனைகளை விரைவாக பூர்த்தி செய்து அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காலாவதியாகி இருந்தமையினால் நிதிப் பிரமானம் 104(4) இன் இறுதி அறிக்கை தயாரிப்பதற்காக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். | |
| (இ) | அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2018 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 05/2018(1) என்ற சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2009 பெப்ரவரி 06 ஆம் திகதிய இலக்கம் 05/2008 என்ற சுற்றறிக்கை. | பிரஜைகள்/ சேவை நலனாளிகளின் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிர்வாக சுற்றறிக்கை 05/2008 இன் பிரகாரம் பிரஜைகள்/ சேவை நலனாளிகள் விஞ்ஞாபனம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | பிரஜைகள்/ சேவை நலனாளிகள் விஞ்ஞாபனம. பொது மக்களுக்கு காட்சிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆம் திகதி இலக்கம் 02/2018 என்ற சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவம். | மனித வள திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிர்வாக சுற்றறிக்கை 02/2018 இன் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2018 சனவரி 24 ஆம் திகதி 02/2018 என்ற சுற்றறிக்கை இணைப்பு 01 படிவம் | 2018 ஆம் ஆண்டில் இருந்து செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்குரிய விடயங்களை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அந்த பணிகளை உள்ளடக்கிய செயலாற்றல் உடன்படிக்கை தயாரித்து அனுப்புவதற்காக சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதையும் தயவுடன் அறியத்தருகின்றோம். | செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | அரச நிதி சுற்றறிக்கை 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 08/2019 சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | சகல அரசாங்க நிறுவனங்களினாலும் இலத்திரனியல் பெறுகைக்காக (Electronic Government Procument (E.G.P) Secretariat) 2020 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த இலத்திரனியல் பெறுகைகளுக்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | Electronic Government Procument (EGP) Secretariat) இலத்திரனயல் பெறுகை முறைமைக்கு 2019 ஆம் ஆண்டின் போது உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்புடைய இலக்கம் ஊடாக பெறுகைக் குழு மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் பெயர்கள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்ட போதும் இது வரை இது தொடர்பான பதிலொன்று மீண்டும் கிடைத்திருக்கவில்லை. அரச நிதி திணைக்களத்தில் இருந்து இது தொடர்பாக விசாரனை செய்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் தாமதம் இன்றி Promise.lk இணைய தளம் ஊடாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் செயற்படுவதற்கு குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் இலத்திரனியல் பெறுகைகளுக்காக பதிவு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1998 இன் 21 ஆம் இலக்க உரித்து நிர்ணய சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் 03 மாவட்டங்களில் 03 பிரதேச செயலகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 18 மாவட்டங்களில் 66 பிரதேச செயலகங்களில் அந்த நடவடிக்கைகளை மேவுகை | பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக கால அட்டவணை 2008 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதன் பின்னர் கால ரீதியில் திருத்தங்கள் மேற்கொண்டு மாற்றப்பட்டிருந்ததுடன், எதிர்பார்க்கப்பட்ட நிதிஏற்பாடு கிடைக்காமை, இலங்கை முழுவதையும் மேவுகை செய்யும் வகையில் உரித்து நிர்ணயித்தல் பணிகளை | திட்டங்களை தயாரித்து இலங்கை முழுவதும் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யும் வகையில் அமுல்படுத்தப்பட்ட போதும் ஏனைய மாவட்டங்களை உள்ளடக்கிய இலங்கை முழுவதையும் மேவுகை செய்யும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துக் கூடிய கால அட்டவணையை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை, உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள், அளவிடல் பிரச்சினைகளில் முறைப்பாடுகளுக்காக உத்தியோகத்தார்கள் இன்மை மற்றும் அளவிடல் நடவடிக்கைகளுக்காக நில அளவையாளர்கள் வராமை போன்றவற்றால் மேலும் இந்த செயற்பாடுகள் தாமதமடைந்திருந்தது. எனினும், இந்த திணைக்களத்திற்கு கிடைக்கின்ற நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 86 பிரதேச செயலக பிரிவுகளில் தற்போது இந்த நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. | |

### 3.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்டுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2007 ஆம் ஆண்டு முதல் காணி அமைச்சின் கீழ் ஒட்டுமொத்த கிரயம் ரூபா 5,911,050,000 செலவில் அமுல்படுத்தப்பட்ட பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 1998 பலாங்கொடை, திவுலப்பிட்டி, உடபலாத்த போன்ற பிரதேச செயலக பிரிவுகளிலும், 2002 இன் போது ஹோமாகம, தமுத்தேகம என்ற பிரதேச செயலக பிரிவுகளிலும் அமுல்படுத்தப்பட்டு 19 இற்கும் 22 வருடங்களுக்கும் இடையிலான காலம் அமுல்படுத்தப்பட்ட போதும், அவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரணை பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றி சான்றிதழ் வழங்குவதற்காக நீண்ட காலம் எடுத்திருந்ததுடன், விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்குகள் மற்றும் உரிய காணி உரித்தாளர்கள் நாட்டில் இருந்து வெளியேறியிருந்தமை போன்ற சந்தர்ப்பங்களின் போது உரித்து விசாரணை நடவடிக்கை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன், | விரைவாக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு காணி கையளித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பலாங்கொடை, திவுலபிட்டி, உடபலாத்தை, ஹோமாகம போன்ற அலுவலகங்களில் இவ்வாறான கோவைகள் கணிசமான அளவு ஒன்று சேர்ந்திருந்தது. இந்த பிரச்சினைகள் தற்போது ஒழுங்கு முறையாக தீர்க்கப்படுகின்றது. எனினும், சட்டத்தின் 55 ஆவது பிரிவின் இறுதி விருப்பம் எழுதாதிருந்த மரணமடைந்த சந்தர்ப்பங்களின் போது உரித்தாளிகளுக்கு காணி கையளிப்பதன் கீழ் விசாரணை செய்து சான்றிதழ் அனுப்புவதற்கும் இந்த அலுவலகம் மூலம் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், தற்போது வரையிலும், மேற்கூறப்பட்ட அலுவலகம் மூடப்பட்டமை அதற்கு அண்மித்ததாக அமைக்கப்பட்டுள்ள அலுவலகம், மூடப்பட்டுள்ள அலுவலகத்தின் மிகுதி நடடிவக்கைகளை கையளிப்பதில் இடம் பெறுவதுடன், எதிர்வரும் 02 வருடங்களில் அந்த பணிகளையும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 16 வருடங்களின் போது 66 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய மொத்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை 3971 காணப்பட்ட போதும், அதில் 1468 மாத்திரம் அதாவது 37 சதவீதம் மாத்திரம் அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 09 பிரிவுகளுக்கு உரிய 207 கிராம சேவகர் பிரிவுகளில் அளவிடல் நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க | 1998 இன் (21) காணி உரித்துறுதிகளை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் காணி பகுதிகளுக்காக பிரித்தல் அளவிடை தயாரிக்கப்படுவது நில அளவையாளர் திணைக்களத்தினால் ஆகும். அந்த திணைக்களத்திற்கு பிரதேச செயலாளர், காணி ஆணையாளர் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களில் இருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளின் பிரகாரம் அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு திணைக்களம் விம்சவிய இற்குரிய அளவிடல் நடவடிக்கைகளை | நில அளவையாளர் திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய அளவிடல் நடவடிக்கைகளை விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. | மேற்கொள்கின்றது. எனினும், இந்த திணைக்களத்தால் அந்ததந்த பிரவுகளுக்காக அளவிடல் கோரிக்கைகள் அனுப்பப்படுவது அந்த பிரிவுகளுக்காக அளவிடல் கோரிக்கைகள் அனுப்பப்படுவது அந்த பிரிவுகளுக்குரியதாக நியமிக்கப்பட்டுள்ள நில அளவையாளர்களின் எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டாகும். அதன் போது இருக்கின்ற உத்தியோகத்தர்களின் அளவிடல் நடவடிக்கைகளை பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (iii) | 2017 ஆம் ஆண்டின் போது 57 பிரதேச பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்ட விம்சவிய நிகழ்ச்சித் திட்டம் மீளாய்வாண்டு வரையில் 66 வரை 09 அலுவலகத்தினால் அதிகரித்திருந்ததுடன், அது இரத்தினபுரி, கொழும்பு, கண்டு, பொலன்னருவை, புத்தளம், காலி, மாத்தரை போன்ற 07 மாவட்டங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டின் போது நுவரெலியா, மெனராகலை, கேகாலை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு வரை 05 வருட காலங்கள் கடந்திருந்த போதிலும், ஒரு பிரதேச செயலக பிரிவிற்கு ஒரு அலுவலகம் வீதம் பேணிச் செல்வதற்கு பதிலாக ஒரு மாவட்டத்திற்கு விம்சவிய அலுவலகம் ஒன்று மாத்திரம் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | இரத்திரனபுரி, கொழும்பு, கண்டி, பொலன்னறுவை, புத்தளம், காலி, மாத்தறை, நுவரெலியா, மொனராகலை, கேகாலை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களின் போது முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. அதற்கு இடையூறாக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட நில அளவையாளர்களின் எண்ணிக்கை பிரதான காரணமாக இருந்ததுடன், ஒவ்வொரு மாவட்டங்களுக்காகவும் போதியளவான நில அளவையாளர்களின் எண்ணிக்கை நியமிக்கும் இயலுமை காணப்படாதிருந்ததாக அந்த திணைக்களம் அறிவித்திருந்தது. மொத்த நாட்டிலும் காணிக் கூறுகள் 12 மில்லியன் அளவில் காணப்படுகின்மை கணிப்பிடப்பட்டுள்ளது. அந்த கூறுகளின் அளவை அளவிடுவதற்காக நில அளவயாளர் | நில அளவையாளர் திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய அளவிடல் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தின் மூலம் 120 உத்தியோகத்தர்கள் மற்றும் 100 தனியார் நில அளவையளார்களின் அளவு மாத்திரம் ஒரு தடவையின் போது நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் சகல நில அளவையாளர்களினாலும் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஆண்டின் போது இந்த திணைக்களத்திற்கு கிடைக்கின்ற பிரிக்கப்பட்ட நில அளவைப் படங்களில் பிரிக்கப்படுவது காணி கூறுகள் 7000 – 8000 அளவு மாத்திரமாகும். அவ்வாறே நில அளவைப் படத்தின் அளவில் பற்றாக்குறை காணப்படுகின்றது. அவ்வாறே நில அளவை படத்தின் அளவில் பற்றாக்குறை காணப்படுகின்றது. அவ்வாறே இந்த திணைக்களத்திற்குரிய இலங்கை நிர்வாக சேவையின் உதவி பிரதி ஆணையாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவைக்குரிய விசாரணை உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்காக சரியான பதில் கிடைக்காமையின் அடிப்படையில் எஞ்சிய மாவட்டங்களுக்காக உரித்து தீர்த்தல் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதில் பிரச்சினையான நிலைமை எழுந்திருந்தது. | |
| (ஆ) | திணைக்களத்தின் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக நாடு முழுவதும் 48 பிரதேச அலுவலகங்களுக்காக கட்டிங்களின் வாடகை மற்றும் பாதுகாப்பு செலவினங்களுக்காக 2017 ஆம் ஆண்டு முதல் | நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 48 பிரதேச அலுவலங்களுக்கு இடையே 06 அலுவலகங்கள் நடாத்திச் செல்லப்படுவது அரசாங்கத்தின் கட்டிடங்களில் ஆகும். தனியார் கட்டிடங்களிடல் | திணைக்கள கொடுக்கல் வாங்கல்களில் ஆகக் குறைந்த செலவினங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட |

மீளாய்வாண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 271,345,483 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2022 ஏப்ரல் 24 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் அரசாங்கத்தின் கட்டிடங்கள் உரிய அலுவலகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டில் மாத்திரம் கட்டிட வாடகை மற்றும் பாதுகாப்பு செலவினமாக ரூபா 50,500,200 செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

நடாத்தி செல்லப்படுகின்ற மிகுதி 42 அலுவலகளும் வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி தற்போது வரையில் 02 அலுவலகங்கள் அரசாங்த்தின் கட்டிங்களுக்கு மாற்றப்பட்டு பாதுகாப்பு செலவினம் மற்றும் கட்டிட வாடகை குறைக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்குரிய புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மற்றும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட அலுவலகங்களுக்காக அரசாங்கத்தின் கட்டிங்கள் பெறப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கட்டிடங்களை பெற்றுக் கொள்வதற்கு சகல மாவட்ட செயலாளர்களிடம் இருந்து விசாரிக்கப்பட்டுள்ளதுடன், கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் அலுவலங்களை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், இனங்காணப்பட்ட குறைவாக பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்தின் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறும் நிதி அமைச்சின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை 2022 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், ஒரு வருட காலத்தில் சகல அலுவலகங்களுக்காகவும் அரசாங்கத்தின் கட்டிடங்களை கண்டறிதல் கஷ்மான பணியாக இருந்ததுடன் சந்தர்ப்பம் கிடைக்கின்ற முதலாவது சந்தர்ப்பத்தின் போதே அரசாங்கத்தின்

வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிடங்களுக்காக பிரதேச அலுவலங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துறுதிகளை பதிவு செய்யும் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை வர்த்தமானியில் இடப்பட்ட மொத்த கூறுகளின் எண்ணிக்கை 1,561,909 இல் 57 சதவீதம் அதாவது 898,125 கூறுகள் உரித்து நிர்ணயித்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 43 சதவீதம் இது வரை அங்கீகரிப்பதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உரித்துறுதிகளை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் நில வரைபடம் இடப்பட்ட காணி கூறுகளும் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்றது. அந்த வர்த்தமானியின் படி உரித்தாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற உரித்து விண்ணப்பப்பத்திரம் (ஹி.நி.கொ.ஜ. 05) இன் பிரகாரம் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் கீழ் உரித்தை உறுதிப்படுத்துவதற்காக விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அந்த விசாரணையின் போது உரிய நிலக் கூறுகள் தொடர்பாக உரித்தாளர்களை நிர்ணயிக்கும் உரிமை ஆணையாளர் நாயகம் உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தின் போது அந்த உரித்துறுதி சட்டத்தின் 14 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்றது. அவ்வாறே மேற்கூறப்பட்ட விசாரணையின் போது உரித்தாளிகளுக்கு இந்த காணி பகுதி தொடர்பாக தமது நிர்ணயித்தல் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்ததாகவும் ஆணையாளர் நாயகம் உறுதிப்படுத்துவதாயின் அந்த காணி கூறுகள் 14 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிப்பதற்கு முடியாதிருந்ததாகும். இவ்வாறே உரித்துறுதி உறுதிப்படுத்துவதற்கு முடியாத சந்தர்ப்பங்கள் அடிப்படை விடயங்கள் பிரதானமாக 12 | காணிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் விரைவாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தலைப்புக்களின் கீழ் திணைக்களத்தில் இனங்காணப்பட்டுள்ளது. அதற்கான தீர்வை நேரடியாக இந்த திணைக்களத்திற்கு மாத்திரம் வழங்கமுடியாதிருந்ததுடன், அந்தந்த நிறுவனங்களுக்கு அனுப்பி கிடைக்கின்ற தீர்வுகளின் ஒட்டு மொத்தம் மீண்டும் 14 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரித்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், நீதிமன்ற தீர்ப்பினை வழங்குதல், காணி உரித்தாளி நீண்ட காலமாக வெளிநாடு சென்றமை போன்ற விடயங்களின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட காணிக் கூறுகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது. இந்த விடயங்கள் திணைக்களத்திற்கு புறம்பான காரணங்களாக இருந்தமையால் அதற்காக இறுதி தீர்மானம் வழங்குவதை விரிவுபடுத்தும் இயலுமை திணைக்களத்திடம் காணப்படவில்லை. | |
| (ஈ) | நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டு முதல் அளவிடப்பட்ட காணிகளில் எழுந்திருந்த சட்ட ரீதியான பிரச்சினைகள், உரித்து பிரச்சினைகள், எல்லைப் பிரச்சினைகள், நுழைவு வீதிகள் தொடர்பான பிரச்சினைகள், உரித்துக்களை தீர்த்து வைத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்த்து வைக்கப்படாத காணிகள் காணப்பட்டமை விகாரை, தேவாலயங்கள் சட்டத்தின் கீழ் எதிர்ப்புகளை உள்ளடக்கிய பல்வேறு பிரச்சினைகளில் 11 | மேற்கூறப்பட்ட 3.2 (இ) இற்கு வழங்கப்பட்டுள்ள பதிலுடன் இணங்குகின்றோம். விம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தில் நிரந்தரமாக கோவைகள் ஒதுக்கப்பட்டமை மற்றும் அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள கோவைகளுக்கு மீண்டும் உரித்து நிர்ணயித்தல் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இவ்வாறு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன், ஒவ்வொரு தடவையும் 05 இலட்சம் அளவான கோவைகளின் அளவு ஒதுக்கப்படுகின்றமை | ஒதுக்கப்பட்டுள்ள கோவைகள் தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வகைகளின் காரணமாக உரித்துறுதி சான்றிதழ் விநியோகிப்பதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்க முடியாதிருந்த 65 பிரதேச செயலகங்களில் வைக்கப்பட்டுள்ள மொத்த கோவைகளின் எண்ணிக்கை மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 472,773 ஆக இருந்தது. இந்த அளவு இதுவரை அளவிடப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மொத்த நிலக் கூறுகளான 1,561,909 இல் 30 சதவீத அளவாக இருந்ததுடன், திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள கோவைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உரிய பிரகாரம் இடம்பொறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவதானிக்கப்பட்டது. எனினும், இந்த கோவைகள் நீதிமன்ற நடவடிக்கையாக தீர்த்தல் அல்லது வெளிநாடு சென்ற நபர்களின் விசாரணை பணிகளை தொடர்புபடுத்துவதன் அடிப்படையில் தீர்த்து வைத்தல் செயற்பாடுகளுக்கு மீண்டும் அனுப்பி சான்றிதழ் பத்திரம் விநியோகிக்கப்படுகின்றது. இந்த பணிகள் தொடர்ச்சியாக ஆய்வுக்கு உட்படுத்தி திணைக்களம் நடவடிக்கை எடுப்பதுடன், கடந்த ஆண்டில் மாத்திரம் ஒதுக்கப்பட்ட கூறுகளின் மூலம் தீர்மானம் வழங்குதல் 2021 இன் போது 9376 உம், 2022 இன் போது 8465 உம் மாத்திரமாக நிறைவேற்ற முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் பயிற்சி சந்தர்ப்பங்கள், ஒன்றிணைந்த விசாரணைகள் மற்றும் தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகளின் மூலம் படிப்படியாக ஒதுக்கப்பட்டுள்ள கோவைகளின் அளவு குறைக்கப்படுகின்றது. | |
| (உ) | 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கடந்த 06 வருடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள கூட்டுமொத்தமான 167,322 ஆன காணி கூறுகளின் எண்ணிக்கை மீண்டும் தீர்வு வழங்கி தீர்மானம் எடுக்கப்பட்ட காணி கூறுகளின் எண்ணிக்கை 58,823 ஆக இருந்ததுடன், அதன் செயல்முன்னேற்றம் 35 சதவீதம் ஆகும். இது பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தடையாக இருந்ததுடன், | ஒதுக்கப்பட்டுள்ள காணி கூறுகளில் தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பொதுமக்களால் உரித்துறுதி உறுதிப்படுத்துவதற்குரிய தேவையான சரியான நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக கோவைகள் மீண்டும் மீண்டும் ஒதுக்க வேண்டி ஏற்படுகின்றது. சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கின்ற பொதுமக்களின் உரித்துக்களை அங்கீகரித்தல் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே உள்ளூராட்சி நிறுவனங்கள், பிரதேச | பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொது மக்களின் காணி உரித்தை நிர்ணயித்தலிலும் தாமதம் ஏற்பட்டமை அதிகமாக தாக்கமளித்திருந்தது. | அலுவலங்கள் போன்ற திணைக்களங்களுக்கு புறம்பான நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான சரிசெய்தல்களை மேற்கொண்டு மீண்டும் சமர்ப்பிக்கும் போது திணைக்களம் விரைவாக நடவடிக்கை எடுக்கின்றது. எவ்வாறாயினும், பொது மக்கள் தரப்பினரின் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் நிறைவேற்றாமையின் காரணமாக கோவைகளை ஒதுக்கிவைத்தல் நீண்ட காலமாக ஏற்படுகின்றது. இவ்வாறான காணி கூறுகளுக்காக உரித்துறுதி 13 படிவத்தின் மூலம் பொதுமக்களுக்கு அறிவித்தலும் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 20 பிரதேச செயலக பிரிவுகளின் காணி பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்ட காணி கூறுகளின் எண்ணிக்கை மற்றும் கிடைத்த சான்றுதழ் பத்திரங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களின் பிரகாரம் இந்த கால பகுதியில் காணி பதிவாளர் அலுவலகத்திற்கு 42,833 நிலக் கூறுகள் அனுப்பப்பட்டிருந்ததுடன், கிடைத்த சான்றுதழ் பத்திரங்களின் எண்ணிக்கை 22,524 ஆகும். அந்த அலுவலகங்களுக்கு இடையே தமுத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் 780 காணி கூறுகள் அனுப்பப்பட்ட போதிலும், எந்தவொரு சான்றிதழும் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், திஸ்ஸமஹாராம, ஹிங்குராக்கொட போன்ற பிரிவுகளுலும் சான்றிதழ் | நிர்ணயித்தல் செயற்பாடுகள் அரசாங்கத்தின் மற்றும் தனியார் காணிகள் என்ற தொகுதி இரண்டிலும் தீர்த்து வைக்கப்படுகின்றது. தனியார் காணிகளுக்காக உரித்துறுதி சான்றிதழ் விநியோகிக்கப்படுவதுடன், அரசாங்கத்தின் காணிகளுக்காக உரித்துறுதி பட்டோலை செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் இந்த அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்ட உரித்துறுதி சான்றுதழ் எண்ணிக்கை கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. | காணி உரித்துறுதி சான்றிதழ் விநியோகித்தல் கீழ் மட்டத்தில் காணப்படுகின்ற அலுவலகங்களை இனங்கண்டு முன்னேற்றத்தை ஏற்படுத்துவற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்தல் செயல் முன்னேற்றம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (எ) | மாவட்ட காணி பதிவாளர் அலுவலகங்களில் இருந்து கிடைத்த உறுத்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது கையில் எஞ்சியிருந்த உரித்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கை 24,898 ஆக இருந்த போதும், எஞ்சி காணப்படுகின்ற சான்றிதழ் பத்திரங்களின் எண்ணிக்கை தொடர்பாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் காலப் பகுப்பாய்வை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச அலுவலகங்கள் திணைக்களத்தின் ஒரு பகுதியாக இருந்ததுடன், திணைக்கள பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பிரதேச அலகாகும். அவற்றில் சான்றிதழ்கள் கையில் எஞ்சி காணப்பட்டதன் காரணமாக காலப் பகுப்பாய்வை பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் அத்தியவசியமற்றதாக இருந்தது. காலப் பகுப்பாய்வு செய்து சான்றிதழ் பத்திரங்களை அலுவலகத்தில் பேணிச் செல்வதற்காக முடியுமான வகையில் விரைவாக உரித்தாளருக்கு சான்றிதழ் பத்திரங்களை வழங்குவதற்கு சகல அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | உரித்துறுதி சான்றிதழ் பத்திரங்கள் தொடர்பான தகவல்களை பேணிச் செல்லல் மற்றும் தகவல் முறைமையை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | உரித்துறுதி நிர்ணயித்தல் திணைக்களத்திற்கு சொந்தமான பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான தரவுகளை உள்ளடக்கி தகவல் முறைமையொன்று இது வரை ஸ்தாபிக்கப்படாமையின் காரணமாக காணி பதிவாளர் நாயக திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள e-land register மென்பொருளுடன் ஒன்றிணைந்த உரித்து விசாரனை செயற்பாடுகளின் போது காணி பதிவேடு, வரலாறுகள் பரீட்சிக்கும் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு இது வரை திணைக்களம் தவறியிருந்தது. | பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான தரவு முறைமையொன்று (e- land hub) தயாரிப்பதற்கு காணி அமைச்சு 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும் அந்த செயற்பாடுகள் முடிவடைந்திருக்கவில்லை. இந்த நிகழ்ச்சித் திட்டம் 03 பிரதான நிறுவனங்களை ஒன்றிணைத்து மேற்கொள்கின்றமையினால் விம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒரு தகவல் முறைமையொன்று அத்தியவசியமாக இருந்தது. e - Lnad Hub முறைமை பூர்த்தி செய்யப்படாமையினால் காணி நிர்ணயித்தல் திணைக்களம் 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பமாக பட்டோலை இணையவழியினை பெற்றுக் | உரித்துறுதி சான்றிதழ் பத்திரங்கள் தொடர்பான தகவல்களை பேணிச் செல்லல் மற்றும் தகவல் முறைமையை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கொள்வதற்காக e - Tilte பெயரில் மென்பொருளொன்றை தயாரித்திருந்தது. கொவிட் தொற்று நோய் நிலைமையினால் நாடு மூடப்பட்டமையினால், அதனை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் கூறுகளாக்கப்பட்ட நில வரைபடங்களின் வலைய இலக்கத்திற்கு மேலதிகமாக பத்திர இலக்கங்கள் பயன்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனால் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட முறைமை அந்த புது இலக்க முறைமையின் பிரகாரம் விருத்தி செய்து கொள்வதற்கு தேவையான இருந்த போதும், நாட்டின் பொருளாதார நிலைமையினால் நிதி அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி புதிய பணிகளுக்காக நிதி ஏற்பாடு வழங்க முடியாதிருந்தது. 2023 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாட்டின் மூலம் அந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான மாதிரிகள் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், கூறு விலை கோரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. காணி பதிவேடு, வரலாற்று தாள் பரீட்சித்தலுக்காக காணி அமைச்சின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டு கணனி நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இணையவளி (Online) வரலாறை பரீட்சிப்பதற்கு முடியுமாக இருந்தது. நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து

| | | | |
|---|---|---|---|
| | | பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பதிவாளர் நாயக திணைக்களத்தின் Online மூலம் காணி வரலாற்றுகளை பரீட்சிக்கும் முறைமை வீழ்ச்சியடைந்தமையினால் அதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ஐ) | 1998 இன் 21 ஆம் இலக்க உரித்து உறுதி பதிவு செய்யும் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் குறிப்பாக குறிப்பிடப்பட்ட ஏதாவது பிரதேசத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்காக உரித்து நிர்ணயித்தல் ஆணையாளரால் ஒன்றிணைந்த சபையொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்ட மாவட்டங்களில் 3971 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 315 இற்கு மாத்திரம் சமரச சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன், மிகுதி 3656 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சமரச சபை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ஒட்டுமொத்த செயல் முன்னேற்றமும் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | தற்போது இந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இணக்க சபைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 36,400,000 பெறுமதியான திணைக்களத்திற்கு சொந்தமான ஆணையாளர் நாயகத்தின் பத்தரமுல்லையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லம் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட போதும் அந்த உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள 0.0612 ஹெக்டேயர் அளவான காணி பெறுமதி நிதி நிலைமைக் கூற்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு இது தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டு அறிக்கை தாமதம் அடைந்ததன் அடிப்படையில் மீள் நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு திணைக்களம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தொலைபேசி மூலம் அறிவித்திருந்தது. | நிதி நிலைமைக் கூற்றில் உரிய காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஐக்கிய நாடுகளின் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட 65-0748 என்ற லேன்ரோவர் டிபென்டர் வண்டியின் சம்பவ திரட்டு புத்தகத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு முதல் இந்த திணைக்களத்தின் கீழ் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட போதிலும், உரிய உரித்தை கையேற்பத்றகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனத்தை கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் வாகனத்தின் பதிவு சான்றுதழின் மூலப் பிரதி தொலைந்தமையினால் (ஐக்கிய நாடுகளின் உலக உணவு விவசாய அமைப்பின் பொறுப்பில் காணப்பட்ட போதும்) பதிவு செய்தல் தாமதம் ஏற்படுவதற்கு காரணமான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு இரண்டாவது பிரதியை பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்தல் தாமதமடைந்திருந்தது. இரண்டாவது பிரதியை பெற்றுக் கொள்வதற்காக ஆணையாளர் நாயகம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | வாகனத்தின் உரித்தை திணைக்களத்தின் பெயரில் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இல. 53-0049 என்ற வாகனம் 2018 பெப்ரவரி 01 ஆம் திகதி 01 ஆம் திகதி முதல் திணைக்களத்தின் வாகன தரிப்பிடத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்த 2020 யூலை 01 ஆம் திகதி நியமிக்கப்பட்ட வாகனங்களை இனங்காணும் விசேட ஆய்வு சபையொன்றினால் விற்றுத் திருத்தல் பொருத்தமானது என பரிந்துரை வழங்கப்பட்டிருக்கும் போது 2022 மார்ச் 25 ஆம் திகதி இந்த வாகனம் தனியார் பொறியியல் கம்பனிக்கு வாகனத்தை பழுதுபார்க்கும் இயலுமை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக மீண்டும் பரிசோதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் 13 ஆம் திகதி வரை வாகனங்கள் பழுதுபார்க்க முடியுமாக இருந்ததா அல்லது இல்லையா என அறிவிக்கப்படாதிருந்ததுடன் வாகனம் மீண்டும் எடுத்து வரப்பட்டிருக்கவும் இல்லை. | அரசாங்க நிறுவனத்திற்காக புதிய வாகனங்கள் வழங்கப்படாமையின் அடிப்படையில் திணைக்களத்தில் காணப்படுகின்ற வாகனப் பற்றாக்குறையை கவனத்திற் கொண்டு காணி அமைச்சு செயலாளரின் ஆலோசனையின் படி 53-0049 கெப் வண்டியை பழுதுபார்க்கும் இயலுமையை பரீட்சிப்பதற்காக லக்திவ பொறியியல் தனியார் கம்பனிக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதுவரை அது தொடர்பான அறிக்கை கிடைக்காமையின் காரணமாக காணி அமைச்சின் இயந்திர பொறியியலாளர், ஆணையாளர் (நிர்வாகம்) மற்றும் போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர்களினால் அந்த நிறுவனத்திற்கு சென்று பரீட்சித்து அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பழுதுபார்ப்பதற்குரிய மதிப்பீட்டை விரைவாக எங்களுக்கு வழங்குமாறு லக்திவ பொறியியல் தனியார் கம்பனிக்கு பிரதான நிறைவேற்று பொறியியலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இயந்திர பொறியியலாளரின் தலைமையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரை மற்றும் லக்திவ பொறியியல் தனியார் கம்பனியின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பழுதுபார்ப்பதற்காகவுள்ள சாத்தியவளம் மற்றும் பொருளாதார ரீதியிலான பெறுமதியின் அடிப்படையில் இந்த வாகனத்தின் மிகுதி நடவடிக்கைகளை செய்வதற்கு | தாமதமின்றி மோட்டார் வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இல. 32-3129 என்ற கெப் வண்டியைப் பழுதுபார்ப்பதற்காக கூறுவிலை கோரல் 2021 நவம்பர் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு அது தனியார் நிறுவனமொன்றிற்கு பழுதுபார்த்தல் மேற்கொள்வதற்கு சனாதிபதி செயலகம் (இயந்திர பொறியியலாளர்) இடமிருந்து அதற்காக பரிந்துரை கிடைத்திருந்த போதிலும் 2023 மார்ச் 13 ஆம் திகதி வரையிலும் உரிய பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாத்தாண்டிய பிரதேச அலுவலகத்திலிருந்து பிரதான அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்ட 32-3129 கெப் வண்டிக்காக 2022.11.15 ஆம் திகதி கோரப்பட்ட கூறுவிலையின் பிரகாரம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு 2022 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்திற்கு உரியதாக போதியளவான நிதி ஏற்பாடு கிடைக்காமையினால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் அமைச்சிற்குரிய இயந்திர பொறியியலாளருக்கு அனுப்பி இனங்காணப்பட்ட அத்தியாவசிய பழுதுபார்த்தல்களை உள்ளடக்கிய அறிக்கையின் பிரகாரம் கூறுவிலை கோரி மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதி ஏற்பாட்டைப் பெற்று விரைவாக பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இல. KH-5711 ஜீப் வண்டியின் இயந்திரத்தை முழுமையாக பழுதுபார்த்தல் 2021 மார்ச் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட முதலாவது சேவைக்காக 2021 ஆகஸ்ட் 09 ஆம் திகதி மீண்டும் அந்த நிறுவனத்திற்கு வண்டி கையளிக்கப்பட்ட போதும் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் 01 வருடம் 07 மாதங்கள் கடந்திருந்த போதும் வாகனத்தை மீண்டும் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஜீப் வண்டியின் மொத்த பழுதுபார்த்தலும் 2021.03.01 ஆம் திகதி 60000 கிலோமீற்றர் உத்தரவாத காலத்தின் கீழ் பி.எஸ்.டீ. மோட்டார் வேர்க்ஸ் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உத்தரவாத காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தடவை சேவை விடுவிப்பு சேவையாக இருந்தமையினால் 2021.08.09 ஆம் திகதி அந்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட இயந்திர பழுதுபார்த்தல் சார்ந்த பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் ஏற்படுவதாக சாரதியின் வாய்மூல அறிவித்தலின் அடிப்படையில் அந்த | பழுதுபார்த்தல்கள் சரியான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருந்ததா என மீண்டும் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழுக்களை பரீட்சிப்பதற்காக சேவை முறை மேற்கொள்வதற்கு அனுப்பப்பட்ட சந்தர்ப்பத்தின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான அறிக்கையொன்று இது வரை அனுப்பப்படாமையினால் அதனை விரைவாக வழங்குமாறு கடிதம் மூலம் அறிவித்து மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஊ) | இல. PF-7885 என்ற வாகனத்தின் பழுதுபார்த்தலுக்கு ரூபா 182,696 தொகை 2021 திசெம்பர் 29 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த பழுதுபார்த்தலுக்காக யப்பான் உதிரிப்பாகங்கள் ஈடுபடுத்தப்பட்டதாக மதிப்பீட்டில் காண்பித்து தாய்லாந்தின் உதிரிப்பாகங்கள் பயன்படுத்தப்பட்டு அது மேற்கொள்ளப்பட்டதாக 2021 திசெம்பர் 28 ஆந் திகதி சாரதியினால் அறிவிக்கப்பட்ட போதிலும் பழுதுபார்த்தல் தொடர்பான கோவை தொலைந்தமையின் அடிப்படையில் உரிய விடயங்கள் தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியாமை தொடர்பாக அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PF-7885 ஆம் இலக்க வாகனத்தில் 2021.10.28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்குரிய கடிதங்களை உள்ளடக்கிய கோவை தொலைந்து போனமையினால் போக்குவரத்து பொதுக்கோவை மூலம் இழக்கப்பட்ட கோவை தொடர்பாக உரிய பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டு புதிய கோவையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அந்த கோவை தொலைந்தமை தொடர்பாக முன்னாள் இருந்த விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் விடயங்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் காணி அமைச்சின் மூலம் இதற்காக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளுமாறு கோரிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது. | வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் உரிய பரிசோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும். |

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் | உத்தியோகத்தர்களில் ஐந்து பேர் (05) தற்போது பிணை வைத்துள்ளதுடன் மிகுதி | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் பொறுப்பு |

| | | |
|---|---|---|
| அரசாங்கத்தின் பணம், வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் போன்றவைகளை கையேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் போன்ற ஏதாவதொன்றில் அரசாங்கத்தின் பணங்களை பகிர்ந்தளித்தல் அல்லது பொருட்கள் போன்றவற்றை விநியோகித்தல் தொடர்பாக நிருவாக ரீதியாக பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்தால் பேணிச் செல்லப்படல் வேண்டும். அவ்வாறே பிணை வைக்க வேண்டிய 75 உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் இருந்த போதிலும் பிணை வைத்துள்ள உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை 5 ஆகும். | உத்தியோகத்தர்கள் தொடர்பாக எதிர்காலத்தில் பிணை வைப்பதற்கு பாஸ் புத்தகம் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதையும் தயவுடன் அறியத்தருகின்றோம். | வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெறப்படல் வேண்டும். |

**3.5 முகாமைத்துவ நலிவுகள்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரதேச அலுவலகங்களை விரைவாக திறக்கும் ஆரம்ப படிமுறையாக 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நியமனம் அந்த பிரதேச செயலகங்களில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட போதும் அந்த பிரதேசங்களின் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களை தாபித்தல் அல்லது அதற்காக எடுக்க வேண்டிய ஆரம்ப படிமுறைகள் எடுக்காமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான காலத்தில் அந்த 05 | முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் என்ற மூன்று மாவட்டங்களின் ஒட்டுசுட்டான், மாந்தை மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகங்களில் இந்த திணைக்களத்தில் உத்தேசிக்கப்பட்ட பிரதேச அலுவலகங்களுக்கு இந்த உத்தியோத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்த பிரதேசங்களில் அமுலில் உள்ள தேசவளமை பொதுச் சட்டத்தின் கீழ் அமுல்படுதப்படுகின்ற ‘‘மற்றும் உரித்து’’ (CO-Ownership) என்ற சட்ட விடயங்கள் மற்றும் எமது திணைக்களத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துறுதிகளை பதிவு செய்யும் சட்டத்திற்குமிடையே பரஸ்பர வேறுபாடுகள் | திணைக்களத்தில் வெற்றிடம் காணப்படுகின்ற நிலையங்களுக்கு இந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கும் சம்பளம் மற்றும் படிகளுடன் ரூபா 2,827,836 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒரு உத்தியோகத்தரின் சம்பளம் மற்றும் படி விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் கடமைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் திணைக்களம் தொடர்புபடாதிருந்ததுடன் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | காணப்படுகின்றமையால் அது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை கிடைத்ததும் உடனடியாக மேற்கூறப்பட்ட அலுவலகங்களை புதிதாக ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக தொடர்ச்சியாக இந்த உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் ஆகக்குறைந்த அலுவலக எண்ணிக்கையில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திணைக்களம் எதிர்பார்க்கின்றமையால் இந்த உத்தியோகத்தர்கள் அரச நிர்வாக அமைச்சிற்கு விடுவிப்பதற்கு திணைக்கள மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2022 பெப்ரவரி 07 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்ட 08 உத்தியோகத்தர்கள் வவுனியா பிரதேச செயலகத்திற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக நியமிக்கப்பட்டு திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றாமல் 11 மாத காலத்திற்கு ரூபா 4,467,690 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | வவுனியா பிரதேச செயலகத்திற்கு தமிழ் மொழியில் வேலை செய்வதற்கு முடியுமான 08 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், கடந்த ஆண்டில் அலுவலகம் ஸ்தாபிப்பதற்கு தேவையான நிதிஏற்பாடு கிடைக்காமையினால் அந்த உத்தியோகத்தர்கள் வவுனியா பிரதேச செயலகத்தில் தொடர்ந்தும் வைப்பதற்கு ஏற்பட்டிருந்த போதும் வவுனியா மாவட்ட அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்காக உதவி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு அரச நிர்வாக அமைச்சுக்கு அனுப்பபட்டிருந்தார். அதனால் உத்தேச மாவட்ட அலுவலகத்திற்கு இந்த உத்தியோகத்தர் நியமிக்கக் கூடியதாக இருந்ததை அறியத்தருகின்றோம். மேலும் இந்த உத்தியோகத்தர் மன்னார் மாவட்டத்தில் உரித்து | வவுனியா பிரதேச அலுவலகத்தை ஆரம்பித்தல் அல்லது உத்தியோகத்தர் வெற்றிடமாக காணப்படுகின்ற ஏனைய அலுவலகங்களுக்கு நியமித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிர்ணயித்தல் கடமைகளின் போது மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்கு உரிய கடமைகளையும் மேற்கொண்டிருந்தார். | |
| (இ) | அளவிடல் கோரிக்கை அனுப்பியது முதல் பிம்சவிய நிகழ்ச்சித் திட்ட செயற்பாடுகளில் பௌதீக செயல்முன்னேற்றம் பூச்சிய பெறுமதியை கொண்டிருந்த போதிலும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக அலுவலக வாடகையாக ரூபா 1,116,000 தொகை மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்தது. | ஜயவர்த்தனபுர கோட்டை பிரதேச அலுவலகத்தில் 1998 இன் 21 ஆம் இலக்க உரித்து நிர்ணயித்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது 14 ஆம் பிரிவில் பிரதான அலுவலகத்திற்கு ஆவணங்கள் அங்கீகரித்து அனுப்புவதற்காக பிரதி/ உதவி ஆணையாளர் ஒருவர் அலுவலகத்திற்கு நியமிக்கப்படாமையின் காரணத்தினால் பௌதீக செயல் முன்னேற்றம் பூச்சியமாக இருந்தது. எனினும், சட்டத்தின் பிரகாரம் 14 ஆம் பிரிவில் அங்கீகாரம் முன்னரே மேற்கொள்ள வேண்டி இருந்த சகல படிமுறைகளும் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2023.02.14 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பிரதேச அலுவலகத்திற்கு உதவி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டமையால் முன்னர் தயாரிக்கப்பட்ட கோவைகளில் மிகுதி கடமைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. 14 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரித்து வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குரிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அந்த பணிகளை நிறைவேற்றியிருந்தனர். | அலுவலகத்தை வினைத்திறனாக நடாத்திச் செல்லல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்ட போதிலும், உரிய நோக்கங்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நிலைபோறான அபிவிருத்தி நோக்கங்களுடன் தொடர்பாகும் முறை மற்றும் 2030 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை குறிப்பாக இனங்கண்டு 2022 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் வருடாந்தம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயல் முன்னேற்றம் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தின் பங்களிப்பு குறித்துரைத்த ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்கம் 1 ஆக காண்பிக்கப்பட்ட ‘‘சகல இடங்களிலும் காணப்படுகின்ற ஒவ்வொரு முறையிலும் அடையாளம் கண்டு பூர்த்தி செய்தல்’’ திணைக்கள விடயப் பரப்பின் பிரகாரம் இனங்காணப்பட்டுள்ளது. நோக்கம் மற்றும் தொடர்புடைய இலக்குகளாக ‘‘1.4 விஷேடமாக வறுமையில் வாடுகின்ற மற்றும் ஆபத்துக்கு உட்படக்கூடியவர்களை உள்ளடக்கிய சகல நபர்களுக்கும் 2030 ஆம் ஆண்டு வரையில் பொருளாதார வளம், அடிப்படை சேவைகள், காணி உரித்து மற்றும் நிர்வாகம் மற்றும் ஏனைய முறையில் ஆதனங்களில் உரிமை, இயற்கை வளங்கள், பொருத்தமான புதிய தொழில்நுட்பம் நுண்நிதி உள்ளடக்கிய நிதி சேவைகளுக்காக நுழைவதற்காக சமமான உரிமைகளை உறுதிப்படுத்தலும், அதன் குறிகாட்டியாக’’ ‘‘1.4.2 ஆண் பெண் உரிமை மாதிரியின் பிரகாரம் சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஒதுக்க காணிகளின் உரித்துக்களுடன் மொத்த வயது வந்தோர் சனத்தொகையிலும்’’ இந்த திணைக்களத்திற்கு தொடர்புபடுகின்றனர். மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்குரிய 2030 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இந்த திணைக்களத்தால் நிறைவேற்றுதவற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளாக காணி உரித்தை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உறுதிப்படுத்தி குறித்துரைத்த உரிமையாளருக்கு உரித்தை வெளியிடுவதற்காக அரசாங்கத்தின் முழுமையான பொறுப்பின் கீழ் உரித்துறுதி சான்றிதழ் வழங்கப்படுகின்றது. 2030 வரையில் இலங்கையின் ஒட்டுமொத்த காணி கூறுகளின் அளவுகளுக்காவும் அரசாங்கத்தின் முழுமையான பொறுப்பின் கீழ் உரித்துறுதி சான்றிதழ் வழங்கி மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான பங்களிப்பை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் சிரேஷ்ட நிலையில் 71 வெற்றிடங்களும், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் 938 வெற்றிடங்களையும் உள்ளடக்கி மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 1121 ஆக காணப்பட்டது. | திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், தற்போது 91 அலுவலகங்களில் 48 ஸ்தாபிக்கப்பட்டு கடமை நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகின்றது. பிரதேச அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகத்தில் சிரேஷ்ட நிலையின் பதவி வெற்றிடங்களுக்கு இடையே 20 பதவிகள் பதிற்கடமை உத்தியோகத்தர்களாக இருந்ததுடன், 05 பிரதேச அலுவலகங்களில் பிரதி/ உதவி ஆணையாளர்களில் வெற்றிடம் காணப்பட்டது. சிஷேட்ட நிலையில் வெற்றிடங்களை நிரப்புமாறு அவ்வப்போது அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும். இதுவரையில் அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதிருந்தது டன், அந்த வெற்றிடங்கள் | அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிரப்பாமையின் அடிப்படையில் மூன்றாம், இரண்டாம் நிலையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | சிரேஷ்ட நிலையில் பிரதி/ உதவி ஆணையாளர் பதவிகள் 04 இற்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்காமல் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பும் வரை சேவைத் தேவையின் அடிப்படையில் உதவி ஆணையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட போதிலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் 2022.05.25 ஆம் திகதிய PSC/APP/HB/01/2022 ஆம் இலக்க கடிதத்தில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அறிவிக்கும் வரை சேவையில் ஈடுபடுத்தவேண்டாமென வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. | நிரந்தர பதவியணியினர் மூலம் தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் 09 பதவிகளில் காணப்பட்ட 1048 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது சேவைத் தேவையினை கவனத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டாம் நிலையில் வெற்றிடங்களை நிரப்புமாறு அவ்வப்போது கோரிக்கை ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருந்துடன், அலுவலக ஊழியர் சேவை மற்றும் சாரதி சேவையின் 20 வெற்றிடங்கள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் மூலம் நிரப்புமாறு பிரமதமரின் செயலாளரின் 2023.01.27 ஆம் திகதிய PMO/SEC/01/09 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கோரப்பட்டிருந்ததுடன், பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி பணிப்பாளர் நாயகத்திற்கும் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |